## ஒளி பிறந்தது!

காகம் கரைந்தது;
காலைவிடிந்தது!
மலர்கள் மலர்ந்தன!
மனதும் மகிழ்ந்தது!
பணிகளை முடிக்க,
கால்கள் நடந்தன!
கோயிலை நோக்கி,
கண்கள் விரிந்தது!
கடவுளைக் கண்டதும்,
மௌனம் வந்தது!
வாழும் வரை இறைவா,
துணையாய் இருந்துவிடு!
-இரமா அனந்தாழ்வார்

--------------------------------

## நல்வரவு!

இனிய புத்தாண்டே வருக!
இன்பங்கள் அள்ளித் தருக!
வியாதியும் வருத்தமும் தீர்ந்து,
வளமாய் வாழ்ந்திட வருக!

பயிர் பச்சை செழித்திட,
பாந்தமாய் வருக!
பாலகர்கள் நல்லவர்களாய் இருக்க,
பாசமுடன் வந்திடுக!

நல்ல உள்ளங்கள் நலமுற வாழ,
இனித்திடவே வருக!
தாய்நாட்டு வீரர்கள் நலம் காக்க,
தாய்ப்பற்றோடு வருக! வருக!!

காவலர்கள்; பாதுகாவலர்கள், வாழ,
பதவிசாய் வந்திடுக!
அகிலமெலாம் காக்க,
அன்புடன் வருக! வருகவே!
-இரமா அனந்தாழ்வார்

-------------------------------